## அகமதாபாத் விமான விபத்து:

# 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்!

## விமானம் விழுந்த விடுதியில் 5 பேர் பலி!

அகமதாபாத்,ஜுன்.13-

**குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து 242 பேருடன் புறப்பட்ட சில நிமிடங்களில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. அதில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலத்த தீ காயங்களுடன் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். சமீப காலத்தில் நடந்த மிகப் பெரிய கோர விபத்து இது.**

அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வியாழக்கிழமை பிற்பகல் 1.38 மணிக்கு புறப்பட்டது. ஏர் இந்தியாவின் 171 என்ற போயிங் ரக விமானம். கேப்டன் சுமித் சபர்வால், துணை விமானி கிளைவ் குந்தர் ஆகியோர் விமானத்தை இயக்கினர். போயிங் 787-8 ட்ரீம்லைனர் எனும் இந்த விமானத்தில் 230 பயணிகள், 12 பணியாளர்கள் என 242 பேர் பயணித்தனர். இவர்களில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் பிரிட்டன் நாட்டையும், 7 பேர் போர்ச்சுகீஸ் நாட்டையும், ஒருவர் கனடாவையும் சேர்ந்தவர்கள்.



விமானம் சரியாக 1.38 மணிக்கு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டதாகவும், புறப்பட்ட 5 நிமிடங்களில் விபத்துக்குள்ளானதாகவும் ஏர் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான விமானத்தின் முன்பகுதி, அகமதாபாத் மேகனிநகர் பகுதியில் பிஜே மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்கள் விடுதியின் கூரையின் மீது விழுந்தது.

பயங்கர வெடிச்சத்தத்துடன் விமானம் விழுந்ததை அடுத்து, தீ பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். பல மீட்டர் தொலைவுக்கு கரும்புகை வெளியேறியது. இந்த விமானம் அகமதாபாத்தில் இருந்து ஒன்பதரை மணி நேரம் பயணித்து லண்டன் செல்லக்கூடியது என்பதால், விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கும் கூறப்படுகிறது.

**துரிதமான மீட்புப் பணிகள்!**

விமானம் விபத்துக்குள்ளான தகவல் கிடைத்ததும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், காவல் துறையினர், தீ அணைப்புத் துறையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீ அணைப்பு வாகனங்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 200-க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அகமதாபாத் மாநகர காவல் ஆணையர் ஜி.எஸ். மாலிக் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோரும் விமானம் விழுந்த மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்தவர்கள் எனத் தெரிகிறது.

**குஜராத் முன்னாள் முதல்வர் மரணம்!**

அகமதாபாத் விமான விபத்தில் குஜராத் மாநில முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்த தகவலை மத்திய அமைச்சர் சி.ஆர் பாட்டீல் உறுதி செய்துள்ளார். தனது மகளை சந்திக்க அவர் நேற்று மதியம் லண்டன் புறப்பட்டதாக தகவல். பிசினஸ் கிளாஸ் பிரிவில் அவர் விமானத்தில் பயணித்தார்.

**பயணி ஒருவர் உயிர் பிழைத்தார்!**

இந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். பயணி ஒருவர் உயிர் பிழைத்ததை அகமதாபாத் போலீஸ் கமிஷனர் ஜி.எஸ்.மாலிக் உறுதி செய்துள்ளார்.

விபத்து குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் முதலில் உறுதிப்படுத்திய ஏர் இந்தியா, பின்னர், விபத்தில் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை எத்தனை பேர் இருந்தார்கள் என்பது பற்றி விவரத்தையும், உறவினர்கள் தொடர்புகொள்ள வேண்டிய உள்நாட்டு ஹட்லைன் எண் 1800 5691 444-யும், வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்வதற்கு +91 8062779200 என்ற மொபைல் எண்ணையும் வெளியிட்டது.

**ரூ. 1 கோடி நிவாரண நிதி!**

இந்த விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் டாடா குழுமம் ரூ.1 கோடி வழங்கும். காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளையும் நாங்கள் ஏற்கிறோம். அவர்களுக்கான சிகிச்சையை உறுதி செய்வோம். விபத்தில் சேதமடைந்த பி.ஜே மருத்துவக் கல்லூரி விடுதி கட்டிடத்தை புனரமைப்பதில் எங்களது பங்கு இருக்கும்” என்று டாடா குழுமம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர், பிரதமர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து அதிபர்கள், பிரதமர்கள் உள்ளிட்டோர் இரங்கலை தெரிவித்துள்ளனர்.

## 242 பயணிகளுடன் சென்ற

# ஏர் இந்தியா விமானம் கோர விபத்து!

## மிகவும் அதிர்ச்சியடைந்ததாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, ஜுன் 13**

**அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் கோர விபத்துக்குள்ளானது குறித்து அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்ததாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

**அகமதாபாத் விமான விபத்து குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

**242 பயணிகளுடன் ஏர் இந்தியா AI171 விமானம் அகமதாபாத்தில் கோரமாக விபத்துக்குள்ளானது அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.**

**பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் குறித்து மிகவும் கவலை கொள்கிறேன். சாத்தியமுள்ள அனைத்து வழிகளிலும் மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நம்புகிறேன்.**

**இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

## தாம்பரம் மாநகரம்

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதிக் கழக கூட்டம்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

தாம்பரம்,ஜுன்.13-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பாக கலந்தாலோசனை கூட்டம் இன்று பி.ஆர்.சி ரெசிடென்சியில் பகுதி அவைத் தலைவர் டி.ஆர்.கோபி தலைமையில் கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக 49வது வட்ட பிரதிநிதி ஏ.ஆர்.பாஸ்கர் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது பின்பு மாநகர கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ. கலந்துகொண்டு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி சிறப்பித்தார் மற்றும் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஜா.ரவிகுமார், லிங்கேஸ்வரிபாபு,ஆர்.செல்வகுமார்,கி.வேலுமணி,எஸ். ஜி.கருணாகாரன்,ரமணிஆதிமூலம், செ.சுரேஷ், எம். வினோத்,இரா.விஜயகுமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள்,மாவட்ட உறுப்பினர்கள்,பகுதி கழக மாநகர அணிகள் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர் இக் கூட்டத்தில் பாக நிலை முகவர்களை கண்காணித்து செயல்பட கீழ்கண்ட பூத்களுக்கு பார்வையாளர்கள்

32வது வட்டம்: மேயர் க.வசந்தகுமாரி,

33வது வட்டம் எம். வினோத், டி.ரமேஷ், மா. கன்னியப்பன், சி.சுரேஷ்,

49வது வட்டம் ஆர். சீனா, பா. ஹரிஷ் ஏ அன்பு, இரா.கந்தசாமி, எம்.ரமேஷ், எம்.கணபதி, விஜய்,

50வது வட்டம் இரா. செல்வகுமார், என்.ஷாஜகான்,பி.காளியப்பன், ஆர். தன்சிங்

51.வது வட்டம் டி.ஆர். கோபி, ˙ரீதர்குமார் ஏ பாபு, எம்.ரவிக்குமார்,அர்ஜுனன்,

52.வது வட்டம் ஜா.ரவிக்குமார்,

53.வது வட்டம் டி.ஆர். முரளி

ஆகியோரை நியமித்தும் 2026 நடைபெறும் தமிழக சட்டமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று 7 முறையாக கழக ஆட்சியையும் 2 வது முறையாக கழக தலைவர் தளபதி அவர்களை ஆட்சி கட்டிலில் அமரவைத்திட நாம் ஒவ்வொருவரும் அயராது உழைத்திட இக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது இறுதியாக பகுதி கழக செயலாளர் மண்டல தலைவர் டி . காமராஜ் நன்றி கூறினார்.

## இ. ஜோசப் அண்ணாதுரை தலைமை! இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ். ஆர்.ராஜா எம். எல். ஏ. பங்கேற்பு!

# பல்லாவரம் வடக்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்- நல திட்ட உதவிகள்!

## டி. ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ. அன்பரசன் - கரூர் முரளி - அத்திப்பட்டு சாம்ராஜ் சிறப்புரை!

பல்லாவரம் - ஜுன் 13

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக. முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்குதல் இன்று 13-6-2025. வெள்ளிக்கிழமை மாலை 6:00. அளவில் செல்லியம்மன் கோவில் தெரு கீழ்கட்டளை உழவர் சந்தை அருகில் கூட்டம் நடைபெறுகிறது.

பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை வகிக்கிறார் வட்டக் கழகச் செயலாளர் கோ. ரங்கநாதன் மாமன்ற உறுப்பினர் பிரேமலதா பண்டேரிநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் பகுதி கழக நிர்வாகிகள் ச. சிவக்குமார் இரா. சேகர் வ.முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் ஜி. கருணாமூர்த்தி எம். இளங்கோ மீசை கே. ராதா, ஐ. கஜேந்திரன், சே. கன்னியப்பன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் .

கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி.ஆர். பாலு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மாண்புமிகு தா.மோ. அன்பரசன் தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி அத்திப்பட்டு சாம்ராஜ் மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ மாநகரச் செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் அ. தமிழ் மாறன், என். நவீன், மு. ரஞ்சன், கோல்ட் டி. பிரகாஷ் பேராசிரியர் எல்.பிரபு கோ. ஜானகிராமன் குளத்துமேடு மூ.நாகலிங்கம் க. ரமேஷ் த. ராஜாராமன் கே. தனசேகரன் வெ. தாமோதரன் மா. சந்திரசேகஸ்வரன் ,

எம்.ஏ. டி. எஸ். விஜய், பா. ராஜா, பி. கே. ஏ. சத்திய பிரபு, ஜெ.இன்ஷா மாம் என். எஸ். மதனகோபால் வீடியோ பி. ஹரி, ஜுலியன் அதிசயராஜ், எஸ் .ஹரி , சரத் வெங்கடேசன் எல். டில்லி பாபு, எஸ். சாகுல் ஹமீது, ஜே. பிரசன்னா எம். இளவரசன், எல். ஆர். சதீஷ் குமார், எம். பிரகாஷ், ஆர். மணிமேகலை, ஒய். பத்ர் நிஷா, எம்.கே. கல்யாணி, ஆர். கோமதி, பி. லதா, வி. ஆதிலட்சுமி டி. லட்சுமி, பல்லாவரம் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் வை.தா.ர. மூர்த்தி வி.கர்னல், வெங்கடேசன், பி.மீனா, ஆர். செந்தில்குமார், ஆ. ராமச்சந்திர ராஜா டி. பார்த்திபன் ராமகிருஷ்ணன், ஜே. சுரேஷ் குமார், செம்பாக்கம் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஏ. வீரபத்திரன், கே. பூபதி ,எச். பாஸ்கர், சரஸ்வதி சந்திரசேகர் டி. கார்த்திக், ஜி. ஜெகநாதன், ம. பர்குணன், ஓ. தண்டபாணி, சி. ஆர். மதுரை வீரன், பா. பாலச்சந்தர், பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் தே. இளங்கோவன், பி. பரமசிவம், டி. ராஜ்குமார் டி.வி. ராஜா எம். சி. மை. அந்தோணி, டி. எச். பிரான்சிஸ் பால் லதா சிவகுமார், ரேணுகா தேவி பரமசிவம், மங்கையர் திலகம் ராஜ்குமார்,

மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் செம்பாக்கம் வடக்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் பாக முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் பகுதி கழக இளைஞரணி செயலாளர் சரத் வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

## ஆ.இராசா எம்.பி. - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ- பங்கேற்பு! தேர்தல் பணி குறித்து

# திருவொற்றியூர் கிழக்கு பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, ஜுன்.13

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் இன்று (13.6.2025 வெள்ளிக்கிழமை) காலை10 மணிக்கு டி.கே.பி.திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருவொற்றியூர் தொகுதி தேர்தல் பணி குறித்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடலில் கழக துணைப் பொது செயலாளர் - மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. ஆலோசனை வழங்குகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாநில வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர் .

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பொது சுகாதாரத்துறை** பொ.சு.து.நக.எண்.B2/4894/2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்க்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர், பொதுசுகாதாரத்துறை அவர்களால் கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறைக்கு தேவையான இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ கருவிகள் சப்ளை செய்தல்.**

| | |
|---|---|
| **பணியின் மதிப்பு தொகை ரூ.39,16,302/-** | **ஒப்ப முன்வைப்புத் தொகை ரூ.39,163/-** |

ஒப்ப நாள் மற்றும் நேரம் : **19.06.2025** அன்று பிற்பகல் **3.00 மணி** வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் : **20.06.2025** அன்று பிற்பகல் **3.00 மணி**

மேலும் விவரங்களுக்கு: https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3014 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாநகர நல அலுவலர்**




கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலி வாயிலாக திறந்து வைத்த திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவள்ளூர் நகராட்சி வார்டு எண் 15 – ல் அமைக்கப்பட்ட நியாய விலை கடையில் மக்கள் பயன்பாட்டிற்கான உணவு பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் வழங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் நகர செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம், முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன்.பாண்டியன், ஜாக்டோ – ஜியோ கூட்டமைப்பின் தலைவர் தாஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர்.திலீபன், நகரக் கழக நிர்வாகிகள் எம்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் த. அயூப் அலி, கு.பிரபாகரன், பா.ராஜி, கே.வீனஸ், நகர் மன்ற உறுப்பினர்கள் இரா.விஜயகுமார், வி.இ.ஜான், டி.என்.பன்னீர்செல்வம், என்.சுரேஷ்குமார், சுனில் குமார், கிளைக் கழக நிர்வாகிகள் பிரகாசம், எஸ்.செந்தில்குமார், உலகநாதன், என்.அன்பு உள்ளிட்ட கழகத் தோழர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

## நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# ரிப்பன் கட்டட வளாகத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனைப் புகைப்படக் கண்காட்சி!

## மாணவர்கள் - பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்!

சென்னை, ஜுன். 13-

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்ட நான்காண்டு சாதனை புகைப்படக் கண்காட்சியினை பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் நேற்று பார்வையிட்டனர்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் ஆணையரகம் ஆகியவற்றின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டு 11.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புகைப்படக் கண்காட்சியில் நகர்ப்புர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாலங்கள், சாலைகள், பள்ளி, மருத்துவமனை, சமுதாயக் கூடம், அலுவகம் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள், மழைநீர் வடிகால்கள், குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள், கழிவுநீரகற்றும் கட்டமைப்புகள், பேருந்து நிலையம், திடக் கழிவு மேலாண்மை, அறிவு சார் மையங்கள், வாரச்சந்தை, தினசரி சந்தை, சென்னை பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி, விளையாட்டு நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதை, நவீன மீன் அங்காடிகள், உடற்பயிற்சிக் கூடம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம், உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளின் சாதனைகள் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கண்காட்சியினை சென்னை பள்ளி மாணவ, மாணவியர், மாநகராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் நேற்று (12.06.2025) ஆர்வமுடன் பார்வையிட்டனர். இந்தக் கண்காட்சியானது 17.06.2025 அன்று வரை நடைபெறுகிறது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் பூண்டி கிழக்கு ஒன்றியம் மற்றும் மாவட்ட இலக்கிய அணி மற்றும் தொண்டரணி சார்பில் செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஜான் பொன்னுசாமி, மாவட்ட அமைப்பாளர்கள் தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, ஜி.சுமன், ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் 1000த்திற்கு மேற்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் கழக பேச்சாளர்கள் வி.பி.ராஜன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் உடன் மு.பகலவன் , பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், வெ. அன்புவாணன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, வெங்கடாஜலபதி, ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், அபிராமி குமரவேல், வி.பி.ரவி, சக்கரவர்த்தி, பாபு , சித்ரா பாபு, பால் சுதாகர், சுரேஷ், பி.குப்பன், ஸ்ரீராம், சிவாய்யா, வெஸ்லி, தில்லை குமார், ஜி. சுதாகர் ,ராமா ராவ், வெங்கடாதிரி, டார்லிங் ராஜா, சீனிவாசன், ரஞ்சித் குமார், உள்பட பலர் உள்ளனர்.